426

பதிவு எண் —M. 5720 வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

# முல்லைக்கொடி

கிழமை வெளியீடு :- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

கிளை–4 | குருகுலம், மாம்பாக்கம்; நந்தன, சித்திரை; 18—4—52. | தளிர்–29

குருகுலத்தின் குறிக்கோள் :

பொதுமறை விளக்கம்—திருவள்ளுவர் தெரிவிப்பது

## மறைமொழி ஆட்சி

மனிதப் பிறவியின் பெருமைக்கு வெளிப்படையான அடையாளம் ஒன்றுண்டு; அதுதான் 'பேச்சு' என்பது. அப்படியே அடிப்படையான அடையாளமும் ஒன்று உண்டு. அதுதான் 'மன உணர்வு' என்பது: ஆதலால் மக்களிற் சிறப்பானவர்களாகிய பெரியோர்கள் மன உணர்வை மேன்மேலும் நுண்ணிதாக்கிப் பேச்சையும் 'வாக்கு' என்னும் வகையில் உயர்வாக்கிக் கொண்டு விளங்குவர். அக ஆற்றலும், வாக்குவன்மையும் பெற்ற அத்தகைய மேலோர்களையே 'நிறை மொழி மாந்தர்' என்று தமிழ் நாடு நீண்ட காலமாகவே கூறி வருகிறது. அந் நிலை அப் பெரியோர்க்குப் பெருமை தருகின்றது.

பொதுவாக, உலகத்தில், அக வன்மைகள் அறியப்படுவதில்லை. நுண்ணிய வெளிகளில் உலவும் நல்ல உயிர்களானால் அவை, அப் பெரியோர்கள் பெருமையை நன்கறிந்துகொள்ளும். பருமனான இம் மண்ணுலகில் உயிர்வாழும் பொது மக்களுக்கு அவ்வருமை பெரும்பாலும் தெரிவதில்லை.

அக ஆற்றல் மறைந்த ஆற்றல்; அதனைப் புலப்படுத்தும் வன்மைக்கு, மொழி, நன்றாய் அமைந்திருக்கிறது. அதனால் அத்தகைய மொழிகள் 'மந்திர மொழி' அல்லது 'மறை மொழி' எனப்படுகின்றன.

மன உணர்வின் ஆற்றலை அவரவர் வாய்மொழியே நன்கு தெரிவிக்குங் கருவி! அம் மொழிக்கு உயிர்ப்பு உண்டு; தன்னிடம் அமைந்த கருத்தை நிறைவேற்றியே தீரும் வன்மை படைத்தது!

உலகத்தை அறவோர் இங்ஙனம் மொழி கொண்டே ஆளுகின்றனர். விஞ்ஞானிகள் கருவிகளைக் கொண்டு உலகை ஆள முயல்வதில், எவ்வளவோ இடர் உண்டு. அவரெல்லாம் [illegible]யாகிய மறைமொழி கொண்டு ஆளத் தெரியாதவர்கள். உலகத்தைப் பருமனுக்கே இரையாக்குகிறார்கள். [illegible]ண்டு ஆள்வோர், உலகை உண்மையிற் செலுத்துகின்றனர். இந்த நாகரிகம் உலகுக்கு இப்போது தேவை.

நிறைமொழி மாந்தர்
பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்.

நிறைமொழி மாந்தர் பெருமை — ஆற்றல் நிறைந்த வாக்கு வல்ல அறவோர்களின் மாட்சியை, நிலத்து — இந்நிலவுலகத்தில், மறைமொழி காட்டி விடும்—அவர் வழங்கும் மந்திர மொழிகள் புலப்படுத்தி விடும்.

ஆற்றலென்றது அருளாற்றல்; பொதுவாக மக்களின் பெருமை மொழியால் உள்ளதென்றால், அவரிற் சிறந்தோராகிய அறவோரது பெருமை, நிறை மொழியால் உள்ளது; ஆதலின், அறவோரை 'நிறை மொழி மாந்தர்' என்று விதந்தார்.

தக்கோர் பெருமையை உலகத்தார் அறிதல் அரிதாதலின், உலகத்தாரிடையிலேயும் அவர் பெருமை அறிதற்கு ஏது உண்டு என்றற்கு 'நிலத்து' என்றார்.

பெரியோர் வாக்குகள் நுண்பொருளமைந்து பிறர்க்கு மறைபொருளாயிருத்தலின், அவற்றை 'மறைமொழி' என்றும், ஆற்றலு[illegible]டையனவாதலின் பெருமையை [illegible]ப்படியானும் புலப்படுத்தி விடும் [illegible] படைத்தது என்றற்குக் 'கா[illegible]டும்' என்றும் ஆசிரியர் கூ[illegible]

# "முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)

**4-ம் ஆண்டுக் கையொப்பம்**

**(5-10-51 முதல்)**

| | | |
|---|---|---|
| உள் நாடு | ரூ. | 4 0 0 |
| வெளி நாடு | ரூ. | 6 0 0 |
| தனித் தாள் | | 0 1 0 |

விற்பனையாளர்கள், தேவைக்கு முன்பணத்துடன் எழுதுக.

முகவரி :—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)


"யாதும் ஊரே, யாவரும் கேளிர்;
தீதும் நன்றும் பிறர்தர வாரா."
—புறநானூறு.


| கிளை | நந்தன, சித்திரை, | தளிர் |
|---|---|---|
| 4 | 18-4-52 வெள்ளி | 29 |


## சமய வளர்ச்சி

வாழ்க்கையின் புறநலங்களுக்காக அரசியலும், அகநலங்களுக்காகச் சமயவியலும் இன்றியமையாதன. அரசியல் வாணிபம் உழவு தொழில் முதலியவைகளாற் பெறும் புறநலங்களை அகநலங்கட்காகப் பயன்படுத்திக் கொள்ளவும், பொருள் முயற்சிகளால் உண்டாகும் தன்னலப் பற்றைக் களைந்து பொது நல ஆர்வத்தை நம்பால் எழுப்பிக் கொள்ளவும் சமயம் வழிகாட்டவேண்டும். அவ்வாறின்றி, புறநலங்களின் வளர்ச்சிக்காகவும் தன்னலப் பற்றை முற்றுவித்தற்காகவும் பயன்படுத்துவதானால் அது கண்டிக்கப்பட வேண்டியதாய்விடும்.

நாட்டில் இன்று 'இந்து சமயம்' என்பது புறச்சடங்குகளே மிக்கதாகவும், அடிப்படையான காரணங்கள் இருப்பினும் சிறிதும் தகுதியில்லாதவர்கள் மட்டுமே பொருள் முதலிய நலங்களைப் பெறுகின்ற முறையிலும் அவற்றைப் புறக்கணித்திருக்கின்ற காரணத்தால் முற்போக்குவாதிகள் அல்லது பகுத்தறிவாளர்கள் என்பவர்களின் கண்டனத்துக்கு இலக்காகியிருக்கிறது.

கண்டிக்கும் அவர்கள், நமது சமயம் என்னும் உணர்வோடு உரிமை பாராட்டி இந்து சமயத்தை மட்டும் கண்டிப்பதைப் பார்க்கும்போது, இச்சமயத்திலுள்ள உண்மைக் கருத்துகளை அவற்றின் காரண காரியங்களோடு தகுந்த முறையில் விளக்கிக் காட்டினால் அவர்கள் ஒப்புக் கொள்வார்கள் என்றே தெரிகின்றது. அவர்கள் நிலைக்கேற்ப உண்மைகளை விளக்கிச் சொல்லாததே குறை என்றும் தோற்றுகின்றது.

சமய வளர்ச்சிபற்றிப் பொதுவான சில வளர்ச்சிகளைக் கருதிப் பார்க்க வேண்டும்.

உண்மைகளை விளக்குகிற போதும், அவற்றிற் கேற்ற சடங்கு முதலிய செயல்களைச் செய்கிறபோதும் தாய் மொழியைக் கையாளுவது ஒரு வளர்ச்சி முறை ஈடுபாட்டுக்கு வசதியாகவும் பொருத்தமாகவும் பயனாகவும் இருக்கும்.

காந்தியடிகள், நாடு விடுதலையுணர்வை நன்கு பெறத் தமிழ்நாடு காங்கிரசு, ஆந்திர காங்கிரசு, என்று காங்கிரசை மொழிவாரியாகப் பிரித்து அவ்வம் மொழிகளில் சுற்றுச் சொற்பொழிவுகள் நடைபெறும்படி செய்தார்; அதனால், மக்களுக்குள் விடுதலை உணர்வு தீவிரமாகப் பரவியது.

ஆதலால், சமயச் செயல்களையெல்லாம் தாய் மொழியிலேயே செய்து விளக்க வேண்டுவதும் வளர்ச்சிக்குரிய நெறியாகும்.

இனி, மக்களுக்கு இன்று தெளிவற்ற போக்கும் குழப்ப மனப்பான்மையும் வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் மிகுந்திருக்கின்றன. சமயத் துறையிலும் அங்ஙனமே. அவற்றை நன்முறையிற் போக்கா விட்டால் விளைவு வேறாய் விடும். நல்வினை தீவினைகளில் நம்பிக்கையற்று யாரும் எதையும் செய்யலாம் என்ற தவறிய நிலைகள் தோன்றலாம். ஆதலால் மக்கள் நினைவைத் தெளிவுள்ள போக்கிற் செலுத்த வேண்டும். அதற்கு, நம் முன்னோர், தமக்குப் பின் வருவார்க்கென்று ஒப்புற்ற வைப்பாக வைத்துச் சென்றிருக்கும் தமிழ் மாமறை நூல்கள் பேருதவியாய் இருக்கும்.

திருக்கோயில் வழிபாடுகளையும் வாழ்க்கைச் சடங்குகளையுங் கூட இத் தமிழ்மறைப் பாடல்களைக் கொண்டே இயற்றும் முயற்சிகளை வலுப்படுத்த வேண்டும்.

சென்னை திருச்சி வானொலிகளில் இவற்றிற்கு நேரங்கள் மிகுதியாகத் தரும்படி பொது மக்கள் கேட்டுக்கொள்ள வேண்டும்.

தமிழிசைச் சங்கத்தார் தமிழ் மறைப் பாடல்களை பற்றி ஆராய்ந்து செய்யும் முடிபுகளைப் போற்றி, இசை வாணர்கள் ஒற்றுமையாய்ப் பின் பற்றி வளர்த்துவர வேண்டும்.

—ஆடலரசு

---

# * என் அன்பே! *

(மா. கோவிந்தராஜன்)

இவ்வீதி பிறகு வட திசை நோக்கிச் செல்கிறது. அதன் தொடக்கத்திலே "ராஜாஜி ஹால்" என்றழைக்கப்படும் அரசாங்க மாளிகையைக் காணலாம். விசாலமான பசுஞ் சோலையின் நடுவே வெண்மையாய் விளங்கும் இவ் வழகிய மாளிகையிலே அரசாங்க விருந்துகள், பொதுக் கூட்டங்கள், கலை விழாக்கள் பல நடைபெறும். மேலும், ஒவ்வொரு மாதத்திய கடைசி நாளில் மாலை ஐந்து மணிக்கு மக்கள் மவுனமாகக் கூடி, மறைந்த மகாத்மாவின் நினைவாய்ப் பிரார்த்தனையில் ஈடுபடுகின்றனர்.

இன்னும் சற்று வடக்கு நோக்கிச் சென்றால் ஐலண்ட் கிரவுண்ட் எனப்படும் ஒரு பெரும் மைதானம் உள்ளது. ஒரு பக்கம் கடலாலும், மற்ற மூன்று பக்கங்களும் கூவம் நதியாலும் சூழப்பட்டிருக்கும் தீவு போன்ற இத் திடல், அரசியல் விழாக்களுக்கும், தேசியத் திருநாட்களில் நடைபெறும் பெருங் கூட்டங்களுக்கும், இராணுவ அணிவகுப்புக்கும் பயன்படுகிறது.

அருகிலுள்ள கடலை நோக்கிச் செல்லும் வீதி வழிச் சென்றால் அவ் வீதி கடலை ஒட்டி ஓடும் வீதியுடன் கலக்கிறது. அவ்விடத்திலே நினைவு மண்டபம் ஒன்று நிற்பதைக் காண்கிறோம். முதல் உலக யுத்தத்தில் தங்கள் உயிரைப் பலியிட்ட கணக்கற்ற நம் நாட்டு வீரர்களின் நினைவாய் எழுந்தது இம் மண்டபம்; போர் நிகழ்ந்த வெளி நாட்டிலே, அந் நாட்டின் மண்ணிலே புதையுண்டு துயிலும் கணக்கற்ற நம் நாட்டுச் செல்வர்களின் வீரத்தை வணங்கவே எழுந்துள்ளது இந் நினைவுச் சின்னம்.

அங்கிருந்து தெற்கு நோக்கி வந்தால் கூவம் நதி கடலில் கலக்கும் இடத்திலே, கரையோரத்திலே படகுகள் சில மிதப்பதைக் காண்பாய். சில சமயம் படகுகளில் இளந் தம்பதிகள் பவனி வருவதைக் காண்பாய். உல்லாசமாய்ப் படகோட்டி விளையாட அங்கே வசதியுள்ளது.

இன்னும் சற்றுத் தெற்கே சென்றால் நீராடும் செயற்கைப் பொழில் ஒன்றைக் காண்பாய். அப் பொழிலில் இளைஞர்கள், சிறுவர்கள், பெண்கள் பலர் நீந்தி, நீராடிக் களிப்பதைக் காண்பாய்.

பிறகு ஒரு சாரியில் கடலை நோக்கி அணி அணியாய் நிற்கும் கவின் பெறு கட்டிடங்களைக் காண்பாய். முதலில் காணும் சில கட்டிடங்களே மராமத்து இலாகா, ரெவின்யூ இலாகா காரியாலயங்கள். பிறகு கட்டிடக் கலைஞர்களின் கைத்திறத்தைக் காட்டும் அரசாங்கக் கல்லூரி, பல்கலைக் கழகம், அதைச் சேர்ந்த மண்டபம் முதலிய கம்பீரமான கட்டிடங்களைக் காண்பாய். சற்றுத் தொலைவில் லேடி வில்லிங்டன் கல்லூரி, மேரி அரசி கல்லூரி முதலிய கட்டிடங்கள் அடுத்தடுத்து நிற்கின்றன.

பிறகு இங்குள்ள அழகிய கடற்கரையைக் காண்கிறோம். இதற்கு மெரினா கடற்கரை என்று பெயர். அழகிலே இது உலகத்திலுள்ள கடற்கரைகளில் இரண்டாவதாய்ச் சிறந்துள்ளது. மாலை வேளையில் இக் கடற்கரை கண்கொள்ளாக் காட்சி தரும்.

கடற் காட்சியை நீ இதுவரை கண்டதில்லை என்று சொல்லியிருக்கிறாய். நேரில் காணுமுன் அக் காட்சியின் சித்திரத்தை உன் மனதிலே தோற்றுவிக்கிறேன்.

(வளரும்)

PHONE 55034 TEL. ENKAYAM
கைத்தறி ஆடைகளில் சிறந்தது எங்கள் கிசான் டிரேட்மார்க்


பட்டாடைகளுக்கும் நூலாடைகளுக்கும் சிறந்த இடம்
கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்
53, கிடங்கு தெரு சென்னை 1.

# சிலப்பதிகாரம்

## 26. மதுராபதியின் கட்டுரை

'முத்துசாமி'

கண்ணகி ஏவியபடியே அழல் அறவோர் உள்ள இடங்களை விடுத்து மறவோர் சேரியில் பற்றியது.

பசுக்களும் கன்றுகளும் அழற் பட்டழியாது ஆயர் சேரி சென்றடைந்தன. யானைகள் குதிரைகள் முதலியன மதிற்புறத்தே சென்றன.

நால்வகை வருணப் பூதங்களாகிய தெய்வங்களும் அந்நகரை விட்டு நீங்கின.

பிராமண பூதம், அரச பூதம் வணிகப் பூதம், வேளாண் பூதம் என்று நால்வகை வருணத்தார்க்கும் நால்வகைப் பூதம் இருந்தனவென்றும் அத் தெய்வங்கள் எரி மண்டவே நகரை விட்டு நீங்கினவென்றும் ஆசிரியர் குறிப்பிடுகையில் அவற்றின் இயல்புகளை வருணித்திருக்கிறார். அவ்வவ் வருணத்தார்க்குரிய மக்களின் கோலம் போலவே அத் தெய்வங்களின் கோலத்தினையும் வருணித்திருக்கிறார். அவற்றின் விரிவை அழற்படு காதையிற் காண்க.

கண்ணகி கணவனைப் பிரிந்த துயரத்தோடே கொல்லன் உலைக்களத்துத் துருத்திபோலச் சுடு மூச் செறிந்து வீதிகளில் திரிந்தனள். சிறு தெருக்களில் கவலையுடன் நின்றும் பின்னர்ச் சென்றும் இப்படியாகத் திரிந்தனள்.

அவ்வாறு திரிந்து கொண்டிருந்தவளிடம் மதுராபதி யென்ற தெய்வந் தோன்றி, "நங்காய், பெறுதற்கரிய உன் துன்பத்தினை யான் அறிவேன். என் பெயர் மதுராபதி யென்பதாகும்" என்று அறிவித்துக் கொண்டு பாண்டிய மன்னர்கள் முறை தவறி ஆட்சி புரிபவர்களல்லர் என்று விளக்க, அவர்கள் மரபில் வந்த இரண்டு மன்னர் வரலாற்றினை யெடுத்துக் காட்டினள். அவற்றில் ஒன்று பொற்கைப் பாண்டியன் வரலாற்றெனத் தோற்றுகிறது.

அவ் விருவர் வரலாற்றினையுங் காட்டி அவர்களைப் போலவே பாண்டியன் நெடுஞ் செழியனும் "மறை நா வோசை யல்லது யாவதும் மணி நா வோசை கேட்டது மிலனே" என்று கூறி நிகழ்ந்தவற்றிற் கெல்லாம் முன் ஊழ்வினையே காரணம் என்றும் கூறினள். அவ்வாறு கூறிய அத் தெய்வம் கண்ணகி கோவலன் இவர்களின் முன்னைப் பிறப்பில் நிகழ்ந்தவற்றையும் எடுத்துக் காட்டியது. அம் முற்பிறப்பு வரலாற்றில் கோவலன் கொலையுண்டதற்குக் காரணமாகிய அவனது முன்னைத் தீவினை விளக்கப் பெறுகிறது. அவ்வரலாறுவது:

"முன்னர்க் கலிங்க நாட்டில் சிங்கபுரத்திலும் கலிங்கபுரத்திலும் அரசு செலுத்திக் கொண்டிருந்த வசு என்பானும் குமரன் என்பானும் தம்முள் பகை கொண்டிருந்தனர். இருவர் நிலத்துக்கும் இடைப்பட்ட ஆறு காவத இடை நிலத்தில் யாரும் செல்லாதிருக்கச் சங்கமன் என்னும் வணிகன் தன் மனைவியோடு பொருளீட்டும் வேட்கையால் சிங்கபுரத்து அங்காடியில் கரவிற் சென்று அருங் கலங்களை விற்றுக் கொண்டிருந்தனன். அரசனிடத்துத் தொழில் செய்துகொண்டிருந்த பரதன் என்பவன் அவனைப் பிடித்துப் பகைவனின் ஒற்றன் என்று கூறிக் கொலை செய்துவிட்டனன். கொலைக்களப்பட்ட சங்கமன் மனைவி நீலி யென்பாள் நிலைக்களங் காணாளாய் "அரசர் முறையோ, பரதர் முறையோ, ஊரீர் முறையோ, சேரியீர் முறையோ" என்று மன்றினும் மறுகினும் முறையிட்டுத் திரிந்தனள். பதினான்கு நாட்கள் கழிந்தபின் கணவனைத் தொழுது கூடும் நாளிது வென்று ஒரு மலையின் உச்சியை யடைந்து உயிர் விட எண்ணியவள், "எங்களுக்கு இத்தகைய துன்பத்தினைச் செய்தோர் எவ்வகையானும் இத்தகைய துன்பத்தை அடையப் பெறுவார்களாக" என்று சாப மிட்டு இறந்து கணவனோடு கூடினள். அப் பரதனே கோவலனாகப் பிறந்தான். அப் பரதன் மனைவியே கண்ணகியாகப் பிறந்திருத்தலும் வேண்டும்."

இவ்வாறு முன்னைய வரலாற்றினை மதுராபதித் தெய்வம் விளக்கிக் கூறினள்.

Telegrams: "RAMBROS"

**N. Ramu Bros;**

GENERAL HARDWARE

MERCHANTS

AVANASHI ROAD,

COIMBATORE.

முன் பிறப்பில் சங்கமன் வணிக குலத்தவன் என்றும் அருங்கலங்களை விற்றுக் கொண்டிருக்கையில் ஐயப்பட்டு அரசன் ஏவலனாகிய பரதன் என்போனால் கொல்லப்பட்டான் என்றும் கண்டோம். சங்கமன் மனைவி தன் கணவன் குற்றமில்லாதவனாயிருக்க ஆராயப்படாமல் கொல்லப் பட்டான் என்று ஊராரை விளித்து முறையிட்டு நிலைக்களங் காணாளாய்த் திரிந்து பதினான்கு நாள் கழிந்ததும் இறந்தனள். அதேபோலத் தீவினை செய்தவனாகிய பரதன் வணிக குலத்தில் கோவலனாகப் பிறந்தான். சிலம்பாகிய அருங்கலனை விற்கு மிடத்தில் அரண்மனைச் சிலம்பு திருடியவன் என்று காட்டப்பட்டு ஏவலனால் கொல்லப்பட்டான். கோவலன் மனைவியும் நிலைக்களங் காணாளாய்த் திரிந்து முறையிட்டுப் பதினான்காம் நாள் மலையுச்சியிற் சென்று கணவனோடு கூடினள். இதனால் முன்வினைத் தொடர்பு அப்படியே தொடர்ந்து வந்து நுகர்விப்பதையறியலாம்.

கண்ணகியால் மதுரை யெரிந்ததற்கும் மதுராபதி யென்னுந் தெய்வம் முன்னை ஊழ்வினையொன்றுண்டென்று காட்டினள். அதாவது "ஆடித் திங்கள் பேரிருள் பக்கத்து, அழல்சேர் குட்டத் தட்டமி ஞான்று, வெள்ளி வாரத்து ஒள்ளெரி யுண்ண, உரைசால் மதுரையோடு அரைசு கேடுறுமெனும், உரையும் உண்டே" என்பதாகும்.

மதுராபதித் தெய்வம் கண்ணகி கோவலன் இவர்களின் முன் பிறப்பை உணர்த்தியதோடு அற்றைக்குப் பதினான்காம் நாள் கண்ணகி கணவனைக் கூடுவள் என்றும் கூறிச் சென்றனள். கற்புடை மகளிர் தெய்வங்களோ டெல்லாம் உரையாட ஆற்றலுடையவர்கள் போலும்!

முன் வினைப் பயனாய் யாவும் நிகழ்ந்திருக்கப் பாண்டியன் நெடுஞ்செழியனைத் "தேரா மன்னன்" என்றும் "இறை முறை பிழைத்தோன்" என்றும், கூறிக் கண்ணகி யிகழ்ந்தது, முன் வினையால் யாவும் நிகழ்ந்ததென்று அறியாததாலேயே.

கோவலன் முற் பிறப்பு வரலாற்றால் ஊழ்வினையின் வலி எவ்வளவு பெரியது என்று தெரிகிறது. "ஊழிற் பெருவலி யாவுள?" என்றார் திருவள்ளுவரும். ஆகவே நமக்குக் காரணம் அறிய முடியாதபடி தீங்குகள் யாதேனும் நிகழுமாயின் இவ்வரலாற்றினை யறிந்த பிறகேனும் அது நம் முன்னைத் தீவினையாயிருக்கவேண்டுமென் றெண்ணித் தீங்கு செய்த பிறரைக் கோபிக்காமலும் எதிர்த்துத் தாக்குதல் செய்யாதிருக்கவும் வேண்டும். இவ்வுண்மையைக் கொண்டன்றோ பன்னெடுங் காலத்துக்கு முன்னரே ஒரு தமிழ் நாட்டுச் சான்றோர் வாக்கில் "தீதும் நன்றும் பிறர் தர வாரா" என்று எழுந்தது. நமக்கு வரும் தீங்கெல்லாம், யார் மூலமாக வரினும், முன்னர் நாம் செய்த தீச் செயல்களின் பயன்தான் என்பதை எவ்வளவு தெள்ளத் தெளிய அவ் வாக்கு விளக்குகிறது! சிலப்பதிகாரக் கதையும் அதனைத்தானே உணர்த்துகிறது. கோவலன் முற்பிறப்பிற் செய்த தீவினையால்தானே கொலையுண்ண நேர்ந்தது. அரசன்பால் குற்றமுண்டென்று சொல்லப்படவில்லையே. இவ்வுண்மையை உலகம் உணருமாயின் மக்கள் எவ்வளவு ஒற்றுமையாய் வாழ்வர். பகைமை யுணர்ச்சி சிறிதேனும் அரும்புமோ?

கண்ணகி, பின்னர், மதுரையின் மேற்றிசை வாயில் வழியாகச் சென்று வைகைக் கரை வழியாகப் போய் மலை நாட்டிலுள்ள திருச் செங்குன்று என்னும் மலையை அடைந்தாள். அதன் உச்சியில் ஏறி ஒரு வேங்கை மா நீழலில் நின்றாள். பதினான்காம் நாள் மதுராபதி தெய்வம் கூறியபடியே விண்ணினின்று ஒரு விமானம் இழிந்துவர அதில் தெய்வ வடிவிலிருந்த கோவலனோடு உடன் ஏறித் துறக்கம் புகுந்தனள். துறக்கம் புகுந்த இவ் வரலாற்றினை இப் பகுதியில் முன்னர் "வேங்கை மா நீழல்" என்ற தலைப்பின் கீழ்க் கண்டோம்.

இத்துடன் சிலப்பதிகாரத்தில் மதுரைக் காண்டம் முடிவடைகிறது. சிலப்பதிகாரக் கதையும் இத்துடன் முடிவடைந்ததெனினும் கண்ணகியைப் போற்றும் வகையில் நடந்த வரலாறுகள், மேல் வஞ்சிக் காண்டத்தில்தான் விரிவாக வருகிறது. அவற்றை வஞ்சிக் காண்டத்தில் அடுத்துப் பார்ப்போம்.

———

# "நான் பெற்ற * * இன்பம்......"

'பா. வரதராசன்'

அறிவெனப் படுவது உயிர்க் குணம். அதுவே உயிர்க்கு ஊனுமாகும். மாந்தரின் அறிவு வளரும் நீர்மையது. இவ்வறிவு வளர வளர, உயிரைப் பிடித்த ஒரு மருள் தேய்ந்து தேய்ந்து ஒருவகைத் தெளிவை இவ்வுயிர் பெறும். இருண்ட அறை ஒன்றின் ஒரு புறத்தே உள்ள ஒளி குன்றிய விளக்கைத் தூண்டத் தூண்ட அவ்விருள் மாய்ந்து அவ்வறையும் ஒளி கொள்ளுவதற்கு அது ஒப்பாகும்.

மாந்தருக்குக் கல்வியும் கேள்வியும் அறிவை வளர்ப்பன. இவற்றல் பெருகிய அறிவு, அனுபவத்தோடு உண்மையறிவை யறியவேண்டும். இவ்வுண்மை அறிவே அறிவுடைமையாகும். அஃது கல்வி, கேள்வி அனுபவம் ஆயவற்றின் பயனும், அவற்றைப்பார்க்கினும் சிறந்தும் உள்ளது.

அஃது 'அற்றம் காக்கும் கருவி'; அஞ்ஞானமாகிய 'செறுவார்க்கு அழிக்கலாகாத உள் அரண்'.

மாந்தரின் கல்வியும், கேள்வியும், இவ்வறிவை மிகுத்துத் திண்மையுடையதாக்கல் வேண்டும். ஏனெனில், உயிரின் இக் குணம், தெளிவுற்றும் திறனுற்றும், ஊனுற்றுமிருந்தால் தான், மனத்தைப் பற்றிப் புலன்களில் இயங்குமிவ் வுயிர், அப் புலன்களின் நன்மை தீமைகளை யாராய்ந்து தீயதி னீங்கி, நன்மையின்கட் செலுத்த ஏதுவாகும். மக்கள் மனமென்னும் நுண்ணிய அகக் கருவியையும் பெற்றவர். தெளிந்த அறிவற்ற உயிர் மனத்தைப் புலனறிந்து செலுத்தாது.

உண்மையறிவை மிருக்க ஏதுவாகும் கல்வியும் கேள்வியும் எத்திறத்ததாதல் வேண்டுமென்பதை இதுகொண்டு ஆய்ந்து தெளியலாம்.

உயிரின் பண்பையும், அது சார்ந்து இயங்கு மனத்தின் இயல்பையும், அம் மனந்தான் தோயும் புலன்களியற்கையையும், அப் புலன்களுக்கு வாயிலாக இலங்கும் பொறிகளின் தன்மைகளையும் அனுபவத்தா லுணர்ந்த நம் பண்டைத் தமிழ் முன்னோர், மக்கள் பிறழ்ந்து வாழத்தலைப்பட்டடக்காலும், அவர்களை, நன்னடக்கையைக் கடைப்பிடிக்கத் திருத்தி வந்தனர். இவ் வியல்புகளை உள்ளத்தே கொண்டு தான் அவர்களைச் செந்நெறியில் செலுத்த ஆவன மேற் கொண்டனர். இல்லையேல், ஒரு காலத்தே சமயத் துறையில் நெறி பிறழ்ந்த இத் தமிழகம் நம் சமயாசாரியர்களால் நெறி முறைப்பட்டுச் செந்நெறி கடைப்பிடித் திருக்குமா?

இச் சமயாசிரியர்கள், மக்களின் அகப் பண்புகளை நன்குணர்ந்தவர்கள். உண்மையை அனுபவத்தா லுணர்ந்தவர்கள். மக்களை எம் முறையில் எந் நெறியில் செலுத்த வேண்டுமென்பதை ஐயமறத் தெளிந்து தொண்டாற்றினர். அதன் பயனை நாம் இங்கு எடுத்தியம்ப வேண்டுவதில்லை.

அச்சமயம் நம் நாட்டகத்தே ஒரு 'மார்டின் லூதரோ' அன்றி ஒரு 'வால்டேரோ' தோன்றி இருந்தால் அதன் பயனையும் ஊகித்துத் தெளியலாம். அவர்கள் பேச்சிலும், எழுத்திலும், உயிர்ப்பும், வேகமும் இருந்தது கண்கூடு. ஆயினும் ஒரு கொதிப்பும், பழிவாங்கும்நோக்கும் அவற்றில் தோய்ந்து, அவற்றைச் செவியுற்ற மக்களை வெறி பிடிக்கச் செய்து, மக்கள் பண்பைப் பெரிதும் கெடுத்துக் கொலைக் கஞ்சா நெஞ்சர்களாக ஆகச் செய்தன. சமயவாதிகளின் மிதமிஞ்சிய கொடுமைகள் இத்தகைய ஒரு பிரதிபலிப்பை உண்டாக்கி இருக்கலாம்.


திருதுலக் கைத்தறிகளில்
நெய்த

## மேல் குட்டைகள்
## (டவல்கள்)

**முறுக்கு நூலால் ஆனவை!**
**தூய்மையான சலவை!**
**கெட்டியான சாயம்!**
**அழகிய கரைகள்!**

மொத்தமாகவும் சில்லரை யாகவும் கிடைக்கும்.

அளவுகள்: 24"X48"
26"X52"
28"X54"
30"X60"

வணிகர்க்கு,
தக்க கழிவுகள் உண்டு!
திருதுலம், மாம்பாக்கம்;
மதுராந்தகம் P. O.

ஆனால் அறிஞர்களின் கடமை, மக்கள் துன்பங்களைக் களைந்தெறிந்து மக்களுக்கும், பிழைபட்ட சமயத் தலைவர்களுக்கும் நல்லறிவு புகட்டி, அஞ்சா நெஞ்சத்துடன் அவர்கள் பிழைகளை எடுத்தோதி அன்னாரைத் திருத்தி நன்னெறியில் செலுத்துவதாகும்.

இங்குத்தான் தொண்டாற்ற முன் வரும் தலைவர்களின் பொறுப்புகள் நன்கு தெளியக் கிடக்கின்றன.

எனவே அன்னாரின் (மேலை நாட்டவரின்) உரிமைப் போராட்டங்களையும், போர்வாழ்வையும் ஒட்டியே அவர்கள் கல்வி கேள்விகள் அமைந்தன. கல்வி விஞ்ஞானமாக வளர்ந்தது.

விஞ்ஞானத்தின் நோக்கே வேறு. அது பன்முறை ஆராய்ந்தே பொருள்களின் இயல்புகளை நிறுவுகின்றது. முடிந்த குறிக்கோள்களைப் புறக்கணித்து, பொருளுண்மைகளை மட்டும் நோக்கும் நோக்குடையது. பொருள்களின் காரணங்களாகிய பூதங்களை ஆராயவும் அவற்றில் வெற்றி கொள்ளவும் அவற்றின் சூழலை ஓர் உருக் கொள்ளவும் செய்வது. அது, பொருள்களிலும், அவற்றின் காரணமான பூதங்களிலும், பிரத்தியட்சமான தன்மைகளில் தான் செயற் படுகின்றது.

இவ் வாழ்விலேயும் ஒரு முழுமையை அது அடையவில்லை. அது காட்டும் ‘உண்மை’ களும் நிலையுள்ளன என்று ஏற்றுக் கொள்ளத் துணியவில்லை. நேற்றோ ளாக, கடந்த இரண்டு நூற்றுண்டுகளாக, ஐயமேதுமின்றி நம்பப்பட்டு வந்த ‘நியூட்டன்’ என்னும் விஞ்ஞானியின் சில கோட்பாடுகளை ‘ஐன்ஸ்டீன்’ என்ற தற்கால விஞ்ஞானி ஒருவர் தன் புதுக் கண்டுபிடிப்புகள் சிலவற்றால் பொய்ப்பித்துள்ளார். இன்னும் சில நூற்றுண்டுகளில் இந்த ‘ஐன்ஸ்டீனின்’ கோட்பாடுகளே பொய் யென மெய்ப்பிக்கப்பட்டாலும் வியப்பேது மில்லை!

விஞ்ஞானத்தின் இந்தப் பிரத்தியட்ச ஆய்வு, மெய்யறிவைப் பெறுதல், உண்மை நாட்டம், அழகையும் நற்பண்பையும் அவாவு மியல்பு, ஆகிய உயிரின் சில குறிக்கோள்களுக்கு உதவி புரிவதாக இல்லை. வாழ்வின் உயிர்ப்புகள் பல அதன் நோக்குக்கு அப்பாற்பட்டன.

விஞ்ஞானத்தின் நோக்கு, மாந்தருக்கு மெய்யறிவைப் புகட்டலும், அன்னாரை உண்மையில் இருத்தலும், அழகையும் நல்லியல்புகளையும் காமுறச் செய்தலு மாயிருக்குமாகில், அத் துறையில் மிக மிக முன்னேற்ற மடைந்துள்ள இன்றைய உலகம் இந் நற்பண்புகளில் கருத்திருத்த ஓய்வு காணாது ஏன் அலைவுற வேண்டும்; உயிரில் கலைக்கும், கவிதைக்கும் உருகும் ஓர் உணர்வை அது ஏன் மிகுக்கவில்லை? அழகைக் காணும் தோறும் அகத்தே எழும் அந்த உள்ள நெகிழ்வு ஏன் உயிரிலே கிளரப்படவில்லை? அகத்தேயே உணர்ந்து போற்றப்படும் அந்த சாத்வீகப் பண்புகள் ஏன் அருகி விட்டன?

உண்மையில், உயிரின் இப் பண்புகளெல்லாம் விஞ்ஞானத்திற்கு அப்பாற் பட்டன. அது கட்டாயமாக இவைகளை வளர்க்க மாட்டாது.

சுருங்கச் சொல்லின் இவ் வாழ்வின் பூர்ண நோக்கு என்ன என்பதை அது தெரிவிக்கவில்லை. நாம் மேற்கொள்ள வேண்டுவது என்ன என்பதும் தெரிவிக்கப் படவில்லை. அதன் பயனைக் கொண்டு ‘முன்னேறிய’ மக்களுக்கோ, தங்களை அடக்கியாளும் திறனும் வன்மையு மில்லை.

இக் காரணங்களால் விஞ்ஞானம், அறிவுடைமையின்பால் (அதன் உண்மைப் பொருளில்) படாது.

அறிவுடைமை, பொருள்களின் மெய்யான பயனைக் காணவல்லது. அது பொருந்திய உயிரே மனத்தை நன் முறையில் பயன் கொண்டு உயிரின் முடிந்த குறிக்கோளுக்கு முயல்வது. அம் முயற்சியே உண்மை நாட்டமாகும்; அவ்வுண்மையே, மாறுதலும் அழியாததுமாகும்.

நஞ்சன்கூடு பல்பொடி
பாக்டெரியாரின்


யுனைடெட் கன்ஸர்ன்,
54, பந்தர் தெரு, :: சென்னை-1.

# * இயற்கைக் காட்சிகள் *

(M. K. சாமி)

சங்க இலக்கியங்களிலே இயற்கைக் காட்சிகள் நிறைய சித்திரிக்கப்பட்டிருக்கின்றன. இயற்கை வனப்புக்களையும், பிற நிகழ்ச்சிகளையும், புனைந்துரையின்றி, உள்ளதை உள்ளபடியே; சொல்லழகாலும், கருத்தழகாலும், படிப்பவர் மனதைக் கவரும் வண்ணம் சங்கப் பாட்டுக்கள் இயம்புகின்றபடியால், அவற்றை நிறையப் படித்து இன்புறுமாறு புலவர்கள் நமக்குக் கூறுகின்றார்கள். அவர்கள் கூற்று உண்மையே என்பதை அப் பாடல்களைப் படித்தோர் நன்குணர்வர். ஆனால் பொதுவான நூல் பயிற்சியுடையோர் சங்க நூற்களை (உரை நூற்களையாலும்) படித்துப் பொருள் விளக்கிக் கொள்ளுதல் கடினம். தூய்மையும் எளிமையுமான தமிழில் கருத்துக்களை நன்கு விளக்கிப் பொருள் எழுதப்பட்டுள்ள "சங்க இலக்கிய இன் கவித் திரட்டுப்" போன்ற உரை நூற்களைப் படிக்கும் போது கல்வியறிவுடையோரும், சங்க நூற்களின் அழகையும், பெருமையையும் தெரிந்து கொண்டு இன்புறுவர் என்பது திண்ணம்.

இனி, தேவாரம், திருநாலாயிரம் முதலிய திருமறைப் பாடல்களிலும் இயற்கைக் காட்சிகள் நிறைய அழகாக வருணிக்கப்பட்டுள்ளன. இவற்றைப் படிக்கும் போதும், நமக்கு இன்பம் பெருகுகின்றது. இவற்றிற்கும் 'சங்க இலக்கிய இன் கவித் திரட்டுக்கள்' போன்ற உரை நூற்கள் வெளிவரின், கற்பவர் மனம் இன்புறுவதோடு அவர் அறிவும் விரிவடையும். தமிழ் மக்கள் இவற்றைப் படிக்க வேண்டுமென்ற தங்கள் ஆர்வத்தையும், ஆதரவையும் காட்டினால், புலவர் பெருந்தகையாளர்கள் இவற்றிற்கும் உரை நூற்களை எழுதி வழங்குவார்கள் என்பதில் ஐயமில்லை.

சிறந்த, சங்கப்பாடல்கள், திருமறைப் பாடல்கள் இவற்றில் கூறப்பட்டுள்ள இயற்கைக் காட்சிகளில் சிலவற்றை இங்குக் காண்போம்:

முருகக் கடவுளுக்குரிய ஆறுபடை வீடுகளில் பழமுதிர் சோலையும் ஒன்று. அந்த ஊரில், மலையில் முருகக்கடவுள் திருக்கோயில் கொண்டிருக்கிறார். அந்த மலையிலிருந்து ஒழுகிவரும் அருவியின் அழகை நக்கீரர் தாமியற்றிய "திருமுருகாற்றுப் படை" யில் கீழ்வரும் வண்ணம் கூறுகின்றார்.

"மலையின் அடிவாரத்திலிருந்து மேலே நோக்குவாருக்கு அருவியானது வெண்ணிறமான பல துகிற் கொடிகள் அசைவது போல, அசைந்து ஒழுகுவது தெரிகிறது. மேலும் அந்த அருவி நீரானது தான் வரும் விசையில் கரைகளிலுள்ள வலி குன்றிய மரங்களைத் தனது தாக்குதலால் வீழ்த்தி விடுகின்றது. வீழ்த்தப்பட்ட அகில் முதலிய கட்டைகளைச் சுமந்து கொண்டும், சந்தன மரங்களை உருட்டிக் கொண்டும், மூங்கிலின் சிறு காம்புகள் மேலே அசைந்துகொண்டிருக்க அதன் வேரையே கிளப்பிப் பிய்த்துக் கொண்டும் வருகின்றது. அவ் வலி மிக்க அருவி. நீரின் மோதுதலால் சுரபுன்னை முதலிய மரங்கள் குலுக்கப்பட்டுத் தமது பூக்களை உதிர்க்கின்றன. அந்தப் பூக்களை ஏற்றிக்கொண்டு அலங்காரத்துடன் வருகிறது அந்த அருவி. (வரும்)

---

## மதிப்புரை

ஆசிப்பவனும்—
ஆசாரிய விநோபா
பாவேவும் :—

ஆசிரியர்: ஜீவபந்து
டி. எஸ். ஸ்ரீபால்.

விலை : அணா 4|-

கிடைக்குமிடம் :

அறநூற் பதிப்பகம், சென்னை 1.

நூல், ஆராய்ச்சி முறையில் பாகுபாட்டமைப்பில் எழுதப்பட்டிருக்கிறது. கருத்துக்கள், பழைய புதிய நற் சான்றுகளிலிருந்து வகையாய்த் திரட்டப்பட்டிருக்கின்றன. கருத்து முடிபுகள் சில, இவ் வாசிரியர் நினைவுக்கேற்ப வேற்றுரு அடைகின்றன. ஆசிரியப் பண்பு தோன்ற இச் சிறு நூல் இயன்றிருக்கிறது; எளிய தமிழ் நடையில் உருக்கமாக அமைந்துள்ளது.

சமண்சமய நூற் கருத்துகளும், சமண் பெரியோர் தொண்டுகளும், ஆசாரிய விநோபாபாவேவின் அரும்பணிகளும், உலக நன்மைக்குரிய பொருளாதார ஒழுக்க நெறிகளும் இதில் தெளிவாக்கப்பட்டிருக்கின்றன. கருத்துக்கள் பயன்படக் கூடியவை.

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர்; தி. சு. பாலசுந்தரம்; குருகுல அச்சகம், மாம்பாக்கம்; மதுராந்தகம். (அஞ்.)